
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 10 டிசம்பர் - 1997 இதழ் - 12



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. தோல்வியும் வெற்றியாகும் 1
2. நற்செய்தியின் ஆசீர்வாதங்கள் 9
3. பெண்கள் பகுதி 14
4. மன மேட்டிமை 17
5. தலைமையாளர் கண்டிப்பாக ஆவிக்குறிய மனிதனாக இருத்தல் வேண்டும் 20
6. ஆவியின் கனி 24
7. இவருக்கு செவி கொடுங்கள் 26
8. தேவனுடைய வார்த்தை 29
9. அரசு வருகிறதா? 31

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 DECEMBER - 1997 Issue -12

## ஆசிரியர் உரை

# "தோல்வியும் வெற்றியாகும்"

இந்த வருடத்தின் இறுதியில் நாம் நின்று கொண்டுள்ளோம். விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்களே பாக்கியுள்ளது. இந்நாட்களில், பல வண்ண அட்டைகளாலான வகை வகையான வாழ்த்துக்கள் நம்முடைய நண்பர்கள், சகோதரர்கள், உறவினர்கள் என்று பல சாராரிடமிருந்து வந்து சேர்ந்து கொண்டிருக்கும். அத்தோடு வளமான வாக்குறுதிகள் பல தந்து, நம்பிக்கையான புத்தாண்டை உங்களுக்குத் தருகிறோம் எனக் கூறி அநேகர் முன்வந்திருக்கவும் கூடும். நீங்களும் அவைகளில் திளைத்து தடுமாற்றங்களை தானமாக தந்த இந்த ஆண்டு, எப்பொழுது முடியும் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருப்பீர்கள். இந்த நாட்களில், **சத்தியம் விரும்பிகளாகிய, திருமறை ஆசான்** வாசகர்களாகிய உங்களை நானும் வாழ்த்த ஆசைப்படுகிறேன். ஆனால் இந்நாட்களுக்கென்றே, பன்னெடுங் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சத்தற்ற வெற்று வார்த்தைகளைக் கொண்டல்ல. ஏனெனில் ஆன்மீகத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டுள்ள நீங்கள், அந்த பாரம்பரிய வாழ்த்துக்களில் திருப்திபட மாட்டீர்கள். அதற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு வசனத்தை மேற்கோள் காட்டி, அதிலே சொல்லப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் எல்லாம் உங்களுக்கு வந்து சேரும் என்று பொய்யாக வாழ்த்தவும் எனக்கு மனமில்லை. ஏனெனில் வேதாகமத்தில் வாக்குத்தத்தங்களாகச் சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் முழு நிபந்தனையோடு கூடியவை. ஆகவே வசனங்களை வாழ்த்துக்களாகச் சொல்லுவதால்

மாத்திரம் அதிலுள்ள ஆசீர்வாதங்கள் உங்களுக்கு வந்து சேராது. வருடக் கடைசியில், இப்படியெல்லாம் சொல்வது நியாயமா என்கிறீர்களா? என்ன செய்வது உண்மையைத்தானே சொல்ல முடியும்.

சரி, உங்களுக்கு, ஆவிக்குரிய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும், சமாதானத்தையும் கொடுக்கும் பயனுள்ள வாழ்த்தாக அடியேனின் வாழ்த்து இருக்க வேண்டுமென நான் எண்ணியபோது தான், பரிசுத்த எழுத்துக்களில் இடம் பெற்றுள்ள ஒரு இளைஞனின் வாழ்க்கை என் நினைவுக்கு வந்தது. கடுமையான தோல்வியைச் சந்தித்த அவன் ஆன்மீக வாழ்க்கை. பின்னாளில் பெரும் வெற்றியாக மாறியுள்ளது. ஆகவே அவனுடைய வாழ்க்கையை ஆதாரமாக வைத்து ஆண்டின் இறுதியில் உங்களை வாழ்த்துவது மிகப் பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

எனவே, அந்த இளைஞன் போலவே, **"ஆவிக்குரிய வாழ்வில் உங்களுக்கு ஏற்பட்ட சகல தோல்விகளும் வெற்றியாக மாறட்டும்"** என நெஞ்சு நெகிழ வாழ்த்தி, உரையைத் தொடர்கிறேன்.

இப்பொழுது, அந்த இளைஞன் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். அவன் பெயர் யோவான் மாற்கு, தாயின் பேர் மரியாள். (அப் 12:12) எருசலேம் நகரவாசி. மிகப் பெரிய மனிதனாகிய அப்போஸ்தலன் பவுலோடு நெருக்கமாக இருக்கும் பாக்கியம் பெற்று, அவனுடன் முதலாவது சுவிசேஷ சுற்றுப் பயணத்தில் பங்கு கொள்ளும் சிலாக்கியமும் அடைந்தவன். (அப் 13:5) ஆனால் என்ன காரணத்தாலோ, வாழ்க்கையில் கிடைத்த இம்மாபெரும் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தாமல் கோட்டை விட்டான். பவுலை விட்டுப் பாதியிலேயே பிரிந்து ஊர் திரும்பி விட்டான் (13:13) ஒருவேளை வீட்டு நினைப்பு வாட்டியதால் வந்த வினையோ அல்லது ஊழியத்தின் கடுமை உண்டு பண்ணின பாரமோ அல்லது பவுலின் கண்டிப்பு ஏற்படுத்திய கலக்கமோ நமக்குத் தெரியாது. எதுவுமே எழுதப்படவில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். இவன் பின் வாங்கிப் போனதற்கான காரணங்களில் நியாயம் எதுவும் இல்லையென்பது. ஏனெனில் இவன் நிமித்தம் பவுலும், பர்னபாவும் செய்து கொண்ட கடுமையான வாக்குவாதமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரிவும் இதை உறுதி செய்கிறது (அப் 15:37–39)

ஆனால், **'துரோகி'** என்ற பட்டத்தோடு கை கழுவி விடப்பட்ட இந்த யோவான் மாற்குவை, பவுல் தன்னுடைய கடைசி நாட்களில் வெகுவாக மெச்சிக் கொள்கிறார். கொலோசே பட்டணத்தாருக்கு தான் எழுதின நிருபத்தில் இவனைக் குறித்து **"தேவனுடைய இராஜ்ஜியத்தின் உடன் வேலையாள்** என்றும், தனக்கு ஆறுதல் செய்தவன் என்றும் குறிப்பிடுகிறார். (கொலோ 4:10–11) மேலும் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் **"மாற்கு ஊழியத்தில் தனக்குப் பிரயோஜன**

**முள்ளவன்"** என்று இவன் குணம் குறித்து கோடிட்டுக் காட்டுகிறார். (2 தீமோ 4:11)

மேற்சொன்ன வசனங்கள், ஒரு தோல்வி வெற்றியாக மாறியுள்ளதைச் சொல்கிறது. அப்படியானால் ஒரு பெருந்தோல்வி வெற்றியாக மாறியது எப்படி? யாரெல்லாம் இதற்குக் காரணமானவர்கள்? என்று கொஞ்சம் அலசிப் பார்த்தால், ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போயிருக்கும் நாம் பெலன் கொள்ளவும், விழுந்து போயுள்ள நாம் எழுந்து நிற்கவும், பின்மாற்றமானவர்களை மீண்டும் மந்தைக்குள் கொண்டு வரவும் பிரயோஜனமாக இருக்குமென நம்புகிறேன். அது மாத்திரமல்ல, எதிர்வரும் ஆண்டு, நமக்கு, மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் வெற்றியையும் உத்திரவாதமாகத் தரும் ஆண்டாகவும் இருக்கும்.

யோவான் மாற்குவின் தோல்வி, வெற்றியாக மாறியதில் யார் யாருக்கு பங்கு இருந்ததென்றும், எப்படியெல்லாம் இருந்ததென்றும் கீழே பார்ப்போம்.

## 1. பர்னபாவின் பங்கு :

முதலாவது, இப்பெரும் வெற்றிக்கு வித்திட்ட பெருமை முழுவதும் பர்னபாவையே சாரும். பொதுவாக, தோற்றுப் போனவர்களின் பக்கம் நிற்பதற்கு, ஆட்களை பூத கண்ணாடி போட்டுத்தான் தேட வேண்டும். ஆனால், இந்த பர்னபாவோ விசேஷ குணமுள்ளவனாக இருந்துள்ளான். பெயருக்கேற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்த பெருமகன்களில் இவனுக்கு முதலிடம் தந்தாலும் தவறில்லையென்றே தோன்றுகிறது. **'பர்னபா'** என்ற இவன் பெயரின் பொருள் **"ஆறுதலின் மகன்"** என்பதாகும். (அப் 4:36). ஏதோ, யோவான் மாற்கு விசயத்தில் மாத்திரம் இவன் ஆறுதலின் மகனாக நடந்து கொண்டான் என எண்ணி விடாதீர்கள். இன்னும் இதற்குப் போதுமான ஆதாரங்கள் வேத வசனங்களில் உண்டு. கவனியுங்கள்.

இவன் கிறிஸ்தவனாக மாறிய ஆரம்ப நாட்களில் செய்த காரியம் என்ன தெரியுமா? கிறிஸ்தவர்களுக்குள்ளாக இருந்த பொருளாதாரக் குறைகள் நீங்கி சமநிலை உண்டாகும் பொருட்டு **"தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று அதின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ் தலருடைய பாதத்தில் வைத்தான்".** (அப் 4:37) கிறிஸ்தவனாக மாறியவுடன் இப்படிச் செய்ய வேண்டுமென்பது, தேவனுடைய கட்டளையோ, அல்லது அப்போஸ்தலருடைய உபதேசமோ அல்ல. அந்நாட்களில் மனவிருப்பமுள்ளவர்கள் இந்த விதமாகச் செய்து, மற்றவர்கள் மீது தங்களுக்குள்ள அன்பையும், தேவன்மீது தங்களுக்கிருந்த பக்தியையும் சிறப்பாக வெளிப்படுத்திக்

கொண்டனர். அவர்களில் பர்னபாவும் ஒருவனாக இருந்துள்ளான். இதிலிருந்து ஏழைக் கிறிஸ்தவர்களுக்கும் "ஆறுதலாக" இருக்க வேண்டுமென்ற அவன் விருப்பத்தை நாம் அறியலாம்.

அடுத்து, அப்போஸ்தலன் பவுல், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் வழியில், இயேசுவால் சந்திக்கப்பட்டு அனனியாவால் போதிக்கப்பட்டு கிறிஸ்தவனாகிறான். எந்த கிறிஸ்தவர்களை அழிக்கும்படியாய், தமஸ்கு பட்டணத்துக்கு வந்தானோ, அதே பவுல் அதே பட்டணத்தில் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதைக் கண்ட யூதர்கள், பொறுக்க மனதில்லாமல், அவனைக் கொலை செய்ய ஆயத்தமானார்கள். (அப் 9:22, 23) அப்பொழுது அவன் கூடையிலே வைக்கப்பட்டு, மதில் வழியாய் இறக்கப்பட்டு, ஒரு வகையாய் எருசலேம் வந்து சீடர்களோடு சேர்ந்து கொள்ளப் பார்த்தான்.

ஏற்கனவே, பவுலின் கைங்காரியத்தால் கலக்கமுற்றிருந்த எருசேலம் பட்டணத்து கிறிஸ்தவர்கள், கிட்டப்போகவே பயந்து, இவனைச் சேர்த்துக் கொள்ள அஞ்சினர். அப்பொழுது பரிசுத்தவான்கள் பயப்படுவதில் நியாயமில்லையென்று கண்ட பர்னபா, பவுலைத் தன்னிடமாகச் சேர்த்துக் கொண்டு பரிசுத்தவான்களிடத்தில் பக்குவமாகப் பேசி, நிலைமையை சாதுர்யமாக சமாளித்து, பவுலை ஏற்றுக் கொள்ளும்படி செய்தான். அந்தச் சமயத்தில், நிராதரவாக இருந்த பவுலுக்கும் "ஆறுதலாகவே" இருந்துள்ளான்.

இதே பர்னபாதான், யோவான் மாற்குவுக்கு, தோற்றுப் போனவர்கள் பட்டியலில் நிரந்தர இடம் கிடைத்து விடாமல் செய்து, தன்னுடைய அருங்குணத்தால் அவனை அரவணைத்து, ஆறுதலாகப் பேசி, நற்பாதை காட்டி தேவனுக்கு உகந்தவனாக மாற்றினான்.

இதற்காக, பர்னபா கொடுக்க வேண்டிய விலை மிகப் பெரிதாயிருந்தது. ஆம், அப்போஸ்தலன் பவுலை விட்டுப் பிரிய நேர்ந்தது. (அப் 15:39) ஆனாலும், அது குறித்து பர்னபா கவலைப் படவில்லை. நல்ல மனிதனாகிய பர்னபா, பவுலையோ அவன் சிநேகத்தையோ அற்பமாக எண்ணி நிச்சயமாக அப்படி நடந்திருக்க மாட்டான். ஏனெனில் பவுல், கிறிஸ்துவால், விசேஷமான முறையில் சந்திக்கப்பட்டவன் என்பதெல்லாம் அவனுக்கு நன்றாகவே தெரியும்.

அப்படியானால் என்ன தான் காரணம் என்கிறீர்களா? ஒருவேளை ஏற்படும் இப்பகையின் மூலம், பவுல் தன்னுடைய அழைப்பிலிருந்து பின்வாங்கிப் போகமாட்டான் என்பது பர்னபாவுக்குத் திட்டமாகத் தெரிந்திருக்கலாம். அதேசமயம் ஒதுக்கப்படுவதின் மூலம் மாற்கு, ஆவிக்குரிய வாழ்வில் முற்றிலும் அழிந்துபோக வாய்ப்புண்டு என திடமாக கருதியிருக்கலாம். சரி, எப்படியோ, பவுலின் பகை பெரிதா

அல்லது ஒரு ஆன்மாவின் அழிவு பெரிதா என்று வந்தபோது, பர்னபா, ஆத்தும பாரத்தோடு நடந்து கொண்டான் என்றே தோன்றுகிறது. நமது பார்வையில், அழைக்கப்பட்ட அப்போஸ்தலனுக்கு ஆதரவாயிராமல், ஒரு பாவிக்குப் புகலிடம் கொடுத்துவிட்டானே இந்த பர்னபா என்று கூடத் தோன்றலாம். ஆனால் பர்னபா அங்கு தவறு செய்யவில்லை என்றே தோன்றுகிறது. தான் ஏற்று நம்பியிருந்த கிறிஸ்தவத்திலே அவனுக்குத் தெளிவு இருந்தது. ஆன்மாவின் அருமை அவனுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே தான் பர்னபாவின் இந்த விவேகமான செயலால், பின்னாளில் பவுலின் பகையும் மறைந்து, ஒரு பெலவீனனும் பெலன் கொள்ள உதவியது.

அருமையானவர்களே, வரும் ஆண்டு வெற்றியாக இருக்க வேண்டுமெனில் பர்னபா போல, நாமும் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் ஆன்மீக வாழ்க்கையில் தோல்வி ஏற்படும் போது, அதை வெற்றியாக்கும் இரகசியத்தைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த இரகசியத்தை தெரிந்து கொள்ள சிறப்புப் பயிற்சி எதுவும் எடுக்கத் தேவையில்லை. இயேசுக் கிறிஸ்து பூமிக்கு வந்த நோக்கத்தில் நமக்கு சரியான தெளிவும் ஆத்துமபாரமும் இருந்தால் அதுவே போதுமானது. தோல்விகள் வெற்றியாகும்.

இன்றைக்கு நிறைய குடும்பங்கள் விசுவாசத்தில் வீழ்ச்சியடைவதற்கும், பல கிறிஸ்துவின் சபைகள் பக்தி நிலையிலிருந்து விழுந்து போவதற்கும் காரணம், ஆங்காங்கே பர்னபாக்கள் இல்லாதது தான். ஆத்தும பாரமில்லாதவர்கள் குடும்பத்தின் தலைவர்களாகவும், தகுதியில்லாதவர்கள் சபையை வழி நடத்துபவர்களாகவும் இருக்கும் வரை தோல்விகளை யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

அருமையானவர்களே, ஆன்மீக வாழ்வில் இதுவரை ஏற்பட்ட தோல்விகள் போதும். ஏற்பட்ட சீரழிவுகளும் போதும். ஆண்டின் இறுதியில் உள்ள நாம் விழிப்படைவோம். நாம் ஒவ்வொருவரும் ஒரு பர்னபாவாக மாறுவோம். வெற்றி வாழ்க்கை வாழ்வோம். யோவான் மாற்குகளின் வெற்றி வாழ்க்கைக்கு தோள் கொடுப்போம். ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைச் செய்வோம். புத்தாண்டிலே ஆசீர்வாதம் பெற்று, கிறிஸ்துவுக்குள் பெருவாழ்வு வாழ்வோம்.

## 2. யோவான் மாற்கு :

அடுத்து, ஒரு மனிதனை தூக்கிவிட மற்றவர்கள் எவ்வளவுதான் முயற்சித்தாலும், சம்பந்தப்பட்டவனுடைய முயற்சி அங்கு பூஜ்யம் என்றால் எந்த முயற்சியும் வெற்றி பெறாது. மற்றவர்களின் முயற்சிக்கு ஈடு கொடுக்கக் கூடிய ஒத்துழைப்பு அங்கு தேவை. ஆவிக்குரிய வாழ்வில் இது இன்னும் அதிகம்.

யோவான் மாற்குவின் வெற்றியில், பர்னாபாவுக்கு கணிசமான பங்கிருந்தாலும், இவனின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது. ஒருவேளை பர்னபா, இவன் பெலவீனம் தெரிந்து, இவனை முறைப்படுத்த முயற்சி மேற்கொண்டபோது, இவன் ஒத்துழைக்க மறுப்புத் தெரிவித்திருந்தால், துணை போன பர்னபா பவுலைப் பிரிந்ததினிமித்தம் குற்றவாளியாகவே இருந்திருப்பான்.

பவுலிடமிருந்து, தான் பின்வாங்கி வந்த நிலையே எனக்கு சாதகமாக உள்ளது என்றும், குடும்பத்தோடும், ஊரோடுமே இருந்து கொள்கிறேன் என்றும் எண்ணியிருந்தாலோ அல்லது நான் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவனல்ல எனக் கருதியிருந்தாலோ, என்ன ஆகியிருக்கும்? ஆன்மாவிலே பெலவீனப்பட்டு நித்திய வாழ்வை இழந்து போயிருப்பான்.

பவுலின் ஊழிய நாட்களில் பலபேர் அவனை விட்டுப் பிரிந்து போனதுண்டு. தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில் கூட இரண்டு பேரை பவுல் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் இமனேயும், அலெக்சந்தரும் ஆவர். (1 தீமோ 1:19, 20) ஆனால், அவர்கள் மனந்திரும்பி, ஏதாவது ஒரு கட்டத்தில், திரும்பவும் ஒப்புரவானார்கள் என்று வேதாகமத்தில் எங்குமே காணோம். பிரிந்தவர்கள், பிரிந்தவர்களாகவே போய் நரக வாழ்க்கையை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர்.

ஆனால், இந்த யோவான் மாற்குவோ, தான் பிரிந்து வந்த காரணம் எதுவாக இருந்தாலும், தான் விழுந்து போன நிலைமை எப்படியிருந்தாலும் அது பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், மீண்டும் ஒருமுறை பரீட்சைக்கு நிற்பதற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தான். கிறிஸ்தவம் நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று என தீர்மானமாக இவன் கருதிவிடவில்லை. தவறு செய்தது தான் தான் என்பதை ஏற்றுக் கொண்டு செயல்படும் மனப்பாங்கு இவனுக்கு இருந்தது.

இன்றைக்கு, சமுதாயத்தில் பலமுள்ள கிறிஸ்துவின் சபைகள் உருவாவதற்கு யோவான் மாற்குகள் தேவை. ஆத்தும ஆதாயப் பணியில் அநேகமாக எல்லா பிராந்திய சபைகளும் ஆர்வமாகத் தான் செயல்படுகிறது. "ஞானஸ்நானத்தின்" மூலம் மக்களை இரட்சிப்புக் குள்ளும், சபைக்குள்ளும் வழி நடத்திக் கொண்டுதானுள்ளனர். ஆனால், சபைகள் ஏனோ எண்ணிக்கையில் வளர வேண்டிய அளவுக்கு வளராமல் உள்ளது. "ஜாண் ஏறினால் முழம் சறுக்குகிறது" என்ற கதையாகத் தான் நிலைமை உள்ளது, என்னகாரணம்? முந்தின யோவான் மாற்குகளாய் அநேகர் மாறி வருகின்றனர். அவர்களை பிந்தின யோவான் மாற்குகளாக மாற்ற, சபைகளில் பர்னபாக்களும் அதிகமாக இல்லை.

ஆகவே, நாம் காலத்தின் கட்டாயத்தாலும், சூழ்நிலையாலும், விசுவாசக் குறைவினாலும் விழுந்து போக நேர்ந்திருந்தால், இந்த யோவான் மாற்குவைப் பின்பற்றி, பிந்தின யோவான் மாற்குவாக மாறி, தவறை உணர்ந்து, விசுவாசத்தில் எழுந்து நிற்போம். வரும் புத்தாண்டில் பெரும் ஆசீர்வாதங்களையும், மட்டற்ற மகிழ்ச்சியையும், அளவு கடந்த சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள இது சரியான அஸ்திபாரமாக இருக்கும். ஆவிக்குரிய மக்களாகிய நாம் புத்தாண்டுக்கு இதைவிடச் சிறப்பாக எவ்வகையிலும் ஆயத்தமாக முடியாது.

## 3. பவுலின் பங்கு :

ஒரு வேளை, யோவான் மாற்குவைப் பகைத்து, ஒரு காலத்தில் ஒதுக்கியிருந்தாலும், அவன் ஆகவே ஆகாது என்று திடமாக நினைத்திருந்தாலும், யோவான் மாற்குவைக் குறித்து நாம் இன்றைக்கும் பேசிக்கொண்டிருப்பதற்குக் காரணம் அப்போஸ்தலன் பவுலே. தன் நிலையை மாற்றிக் கொண்டு, உண்மையை ஒத்துக்கொண்டு, தான் ஒதுக்கின ஒருவனை மெச்சின பவுலின் கிறிஸ்தவப் பண்பு பாராட்டுக்குரியது. மற்றவர்களுக்குப் போதித்துப் பிரசங்கித்து எழுதின எல்லாவற்றையும் தன் வாழ்க்கையில் அப்படியே கடைப்பிடித்துள்ளான். **"....... ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்"** (கொலோ 3:12,13) கிறிஸ்து போதித்த இந்த மன்னிக்கும் குணத்தை தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் அப்படியே ஏற்றுக்கொண்டபடியால் தான், மற்ற எந்த அப்போஸ் தலராலும் தைரியமாகச் சொல்ல முடியாதை தான் சொல்லியுள்ளார். "நான் கிறிஸ்வைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிற வர்களாயிருங்கள்" என்று. (1 கொரி 11:1).

மாற்கு, ஊழியத்தில் ஒத்துழைக்க மறுத்து, பின்வாங்கிப் போனது உண்மை. தனக்கும் பர்னாபவுக்கும் பகையை உண்டு பண்ணினது உண்மை. இருப்பினும் அவன் மனம் மாறினான் என்பது தெரிந்தவுடன் தயக்கமில்லாமல் அவனை ஏற்றுக்கொண்டு, மீண்டும் ஊழியத்தில் தன்னோடு இணைத்துக்கொண்டு பயன்படுத்தினான்.

இதை வாசிக்கும், அருமை நண்பரே! சகோதரரே, ஒருவேளை பவுலின் நிலைமையில் - அதாவது இயேசுவால் நேரிடையாக அழைக்கப்பட்ட ஒரு அப்போஸ்தலனாக நாம் இருந்திருந்தால், இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்திருப்போம் என்று கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். ஆயிரம் காரணங்களை அடுக்கி யோவான் மாற்குவை அலட்சியம் செய்திருப்போம், அப்படித்தானே.

ஆம், நம்முடைய உலகக் கல்வி, வயது, அந்தஸ்து, செல்வாக்கு அப்போஸ்தலப்பட்டம், ஊழியச்சாதனை போன்றவற்றை சிறப்பாகப் பட்டியலிட்டு, இவைகளை மாற்குவோடு ஒப்பிட்டு, அழைத்து வந்து பர்னபாவையும் சேர்த்து ஒரு பிடி பிடித்திருப்போம். ஒரு வேளை உண்மையாகவே அவன் மனம் மாறியிருப்பது தெரிந்தாலும், அதற்குப் போதுமான ஆதாரங்கள் இருந்தாலும், அவனை மீண்டும் ஏற்றுக்கொள்வது நமது தகுதிக்கு இழுக்கு என்று எண்ணியிருப்போம். இப்பொழுது இவனை ஏற்றுக்கொண்டால், நாம் ஏற்கனவே செய்தது "தவறு" என்பதை நாமே ஒப்புக்கொண்டது போலாகிவிடும் என்று மனதுக்குள்ளே எண்ணி, அதை வெளியிலும் சொல்ல முடியாமல், காரணமில்லாமல் சுற்றிலுமுள்ளவர்களைச் சீறியிருப்போம். ஆம், அப்படித்தான் அநேகராகிய நாம் செய்திருப்போம். ஆனால் பவுலடியாருக்கு உண்மையை ஒப்புக்கொள்ளும் துணிவும், மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் இருந்தது. இந்த அரிய பண்புகள் இல்லாமல், எத்தனை குடும்பங்களும், உண்மையான சபைகளும் அழிந்து கொண்டிருக்கிறது தெரியுமா? தனிமனிதனின் கௌரவத்தாலும், அகந்தையினாலும் அழிந்து கொண்டிருக்கும் சபைகளை நினைக்கும் பொழுது வேதனையாக உள்ளது. இயேசுக்கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த கிறிஸ்துவின் சபை (அப் 20:28) தனி ஒருவனின் கௌரவத்தாலும், வரட்டுப் பிடிவாதத்தாலும் அழிவது, நியாயமா? சிந்திப்போம்.

ஒருவேளை நாம் ஏதாவது ஒருவகையில் மற்றவர்களின் மனமாற்றத்திற்கும், ஒப்புரவாகுதலுக்கும் தடையாக இருந்தால், நம்முடைய நிலையை சீர்தூக்கிப் பார்க்க இது சரியானதொரு தருணம். தற்பரிசோதனை செய்வோம். நான் மூப்பராக இருக்கிறேன், நான் ஊழியராக இருக்கிறேன், என்றெல்லாம் எண்ணாமல், மனம்மாற விரும்புபவர்களை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு, அரவணைத்து பவுல் போல வழிநடத்துவோம். நம்முடைய கௌரவம் எப்படிப் பாதிக்கப்பட்டாலும் உண்மையை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு, நீதிக்குத் தலை வணங்குவோம். இப்படிச் செய்வோமானால், பவுலுக்காக காத்துக் கொண்டிருக்கும் வாடாத ஜீவ கிரீடம் நமக்கும் கிடைக்கும். (2 தீமோ 4:8) வரும் ஆண்டும் ஆசீர்வாதமான ஆண்டாக இருக்கும்.

ஆம், எனதருமை சகோதரர்களே, சகோதரிகளே, எதிர்வரும் ஆண்டு ஆசீர்வாதமாக இருக்க, நாம் ஒவ்வொருவரும் ஒரு பர்னபாவாக, ஒரு பிந்தின யோவான் மாற்குவாக, ஒரு அப்போஸ்தலன் பவுலாக வாழ பரலோகத்தின் தேவன் உதவி செய்வாராக!

"அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்கள்"

S. *ராஜநாயகம்*

# நற்செய்தியின் ஆசீர்வாதங்கள்

நற்செய்தியில் உண்மைகளுக்கும், கட்டளைகளுக்கும் மேலாக நற்செய்தியின் ஆசீர்வாதங்களும் உள்ளன. சந்தேகமின்றி, உண்மைகளை நம்பவும், கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். நற்செய்தியை விசுவாசித்து, கீழ்ப்படிவோர் அதின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார் : "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே. 1 : 3). அவருடைய ரோமாபுரி சகோதரர்களுக்கும் அவர் எழுதும்போது, "நான் உங்களிடத்தில் வரும் போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக் கிறேன்" (ரோமர் 15 : 29) என்று சொல்லுகிறார்.

இந்த ஆசீர்வாதங்கள் யாவை? அவை நிறைய இருந்த போதிலும், பிரபலமான சிலவற்றை மட்டும் நாம் பார்க்கலாம்.

1. கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. "பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2 : 38). ஒருவன் இரட்சிக்கப்படுகிறான் என்பதைக் கூறும் மாற்று வழி இது. (மாற்கு 16 : 16). அவன் மீண்டும் பிறந்திருக்கிறான் (யோவான் 3 : 5). ஒருவனுடைய பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டிருக்கின்றன என்பதும், இப்போது அவன் ஒரு புதிய மனிதனாக; வாழ்வை மீண்டும் புதிதாகத் தொடங்கத் தயாராகிவிட்டான் என்பதும் எவ்வளவு ஆச்சரியமான் காரியமாக இருக்கிறது.

2. நற்செய்தியின் வழியாக ஒருவன் கிறிஸ்துவுக்குள் வருகிறான். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 6 : 3). "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்

கொண்டீர்களே". (கலா 3 : 26, 27). "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின". (II கொரி. 5 : 17). நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், கர்த்தருக்குச் சொந்தமான மக்களுக்காக அவர் ஒதுக்கி வைத்துள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் நாம் பாத்தியப்பட்டவர்களாகிறோம்.

3. நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் மூலம், கிறிஸ்துவின் சரீரம் அல்லது சபையில் நாம் பிரவேசித்தோம். கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றி I கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர் பவுல் நீண்ட ஒரு விளக்கம் தருகிறார். சந்தேகமின்றி, சரீரமென்பது சபை என்று நிச்சயமாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. (கொலோ. 1 : 18; எபே. 1 : 22, 23). பின்னர், திருமுழுக்கு என்னும் செயல் மூலமாக நாம் சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் பிரவேசிக்கிறோம் என்பதாக அவர் விளக்குகிறார். "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". (I கொரி 12 : 13) உலக முழுவதிலும் சபை தான் மிகப்பெரிய ஸ்தாபனம். அதை யாரும் அழிக்க இயலாது; மாறாக அது என்றென்றும் நிலைத்து நிற்கும். இப்படிப்பட்ட ஒரு சரீரத்தின் அவயவமாக, கர்த்தரின் சபையில் அங்கத்தினர்களாக, இருப்பதில் எவ்வளவு ஆச்சரியப்பட வேண்டும்.

4. நாம் இப்போது தேவனுடைய பிள்ளைகள், எனவே நாம் கிறிஸ்தவர்கள். "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் "(I பேதுரு 4 : 16) ஏன்? ஏனென்றால் கிறிஸ்துவின் நாமத்தாலே இரட்சிப்பு உண்டு. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. "(அப். 4 : 12). அதைப் பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள்! கிறிஸ்துவை விசுவாசிப்பதிலும், அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படிவதிலும், அவருடைய நாமத்தை நாம் தரித்துக் கொள்ள அனுமதிப்பதின் மூலம் நம்மை அவர் கௌரவப்படுத்துகிறார். இது ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதமாகும்.

5. கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தரை தொழுதுகொள்ளும் நிலையில் இருக்கிறோம். "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது

கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்" (யோவான் 4 : 23, 24). நாம் கூடி வருவதை விட்டு விடாதிருக்க நாம் எச்சரிக்கைகூட செய்யப்படுகிறோம். "சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்" (எபி. 10 : 25). வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தரை தொழுது கொள்ள, கர்த்தரின் மக்களோடு சந்திக்கும் வாய்ப்பு நமக்கு எவ்வளவு மகத்தான சலுகையும், கனமுமாக இருக்கிறது. அதை ஒரு பொறுப்பாகவோ, அல்லது கடமையாகவோ நாம் எடுத்துக் கொள்ளாமல், நமக்கு அளிக்கப்பட்ட ஒரு சலுகையாக எடுத்துக் கொள்ள வேண்டும். நமது மதிப்பிற்குரிய விருந்தாளியாக இருப்பதாக கர்த்தரே வாக்களித்திருக்கிறார். நிச்சயமாக அவரை நாம் ஏமாற்றத்திற்குள்ளாக்கக் கூடாது. ஏனெனில் அவர் தாமே, "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 18 : 20).

6. அடுத்து, ஐக்கியத்தில் ஆசீர்வாதமுள்ளது, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாத் தரித்திருந்தார்கள்" (அப். 2 : 42). நமது கிறிஸ்தவ சகோதரர்கள் நமக்கு அளிக்கும் உதவியும், ஊக்கமும் கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவை. வாரந்தோறும் கூடி வருவதின் மூலமாகவும், ஆராதனை மூலமாகவும், பணி மூலமாகவும் கிடைத்திடும் ஐக்கியமே ஒரு பெரிய ஆசீர்வாதமாகும்.

7. ஜெபம் செய்யும் சலுகை நமக்கு உள்ளது. தேவன் எல்லாருடைய ஜெபங்களையும் கேட்பதில்லை. "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்", (யோவான் 9 : 31). வேறு விதமாகக் கூறின், தேவனை தனது பிதாவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய, தேவனுடைய பிள்ளைக்காக ஜெபம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்ற போதிலும், அவனுடைய ஜெபம் கேட்கப்படவும், வேண்டுகோள் நிறைவேற்றப்படவும், தேவனுடைய விருப்பத்திற்கேற்றபடியே அவனது ஜெபம் அமைய வேண்டும். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்," (I யோவான் 5 : 14).

தொடர்ந்து எபிரேய எழுத்தர் கூறுகிறார் : "ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக் கடவோம்," (எபி. 4 : 16). ஜெபத்தின் மகத்தான ஆசீர்வாதத்தைப் பற்றி இங்கு அவர் கூறுகிறார். தேவையில்லாத போதிலும், பிரட்சனை அல்லது வேறு எதுவாக இருப்பினும் கர்த்தரிடம் நாம் ஜெபம் செய்ய வேண்டும்; அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவற்றை அவரிடம் எடுத்துச் செல்ல முடியும், அவரோடு நாம் பேசக் கூடும், அவர் நம் பேரில் இரக்கப்பட்டு, புரிந்து கொண்டு, நமது வேண்டுகோள்களை நிறைவேற்றுவார் என்பதில் நாம் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

8. கர்த்தரின் பந்தியில், வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் பங்கு பெறும் போது, அவரை நினைவு கூறும் கௌரவத்தை நாம் அடைகிறோம். இது பற்றி பவுல் கூறும் போது, "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? (I கொரி. 10 : 16). நமக்காக மரித்தவருக்காக அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் நினைவு கூர்ந்து நாம் மரியாதை செலுத்துவது உண்மையிலேயே மிகப் பெரிய ஆவிக்குரிய ஒரு ஆசீர்வாதமாகும். இதனால் நாம் வலிமையுடையவர்களாக்கப்படுகிறோம்.

9. கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்த ஆவியானவரின் கனிகளை நாம் பெற்றிருக்கிறோம். அப். 2 : 38ம் வசனத்தை மீண்டும் குறிப்பிடும் போது, மனந்திரும்புதலாலும், திருமுழுக் காலும் நமது பாவங்களுக்கு நாம் மன்னிப்பு அடைந்து, பரிசுத்த ஆவியின் கனிகளையும் அடைகிறோம் என்று பேதுரு கூறுகிறார். தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவி நம்மில் வாழ்வது ஈடு இணையற்ற ஒரு ஆசீர்வாதம். இதைவிட பெரிய கௌரவம் நமக்கு ஏது?

10. கர்த்தருக்காக வாழவும், இந்த பூமியில் அவருடைய பிரதிநிதியாக செயல்படவும் கூடிய ஆசீர்வாதத்தை நாம் அடைகிறோம், "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்." (கொலோ. 3 : 17), "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.". (மத்தேயு 6 : 33), என கிறிஸ்துவே கூறினார்.

11. கர்த்தர் நம்மோடு எப்போதும் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுவதிலும், கர்த்தரின் வழியை பிறருக்கு நாம் கற்றுக்

கொடுப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறோம், பிறருக்கு, ஏன் இந்த உலக மக்கள் அனைவருக்குங்கூட, சத்தியத்தைக் கற்றுக் கொடுக்கவும், கிறிஸ்துவுக்குள் அவர்களை மனந்திருப்புவதையும் விட மேலான ஆசீர்வாதமாக நாம் அவர்களுக்கு இருக்க முடியுமா? அதுமட்டுமல்ல கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்றும் போது, இப்பொழுதும் எப்பொழுதும் அவர் நம்மோடு இருப்பதாக வாக்களித்திருப்பது எவ்வளவு உற்சாகமாக இருக்கிறது? அவர் கூறுவதைக் கேளுங்கள். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத் 28 : 19, 20).

12. இறுதியாக, கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து அவருக்கு விசுவாசமுள்ளவர்களாக தொடர்ந்து வாழ்ந்தால், நமக்கு ஒரு ஜீவ கிரீடத்தை அல்லது நித்திய ஜீவனை தருவதாக கர்த்தர் வாக்களித் திருக்கிறார். "ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளில் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22 : 14). நீ மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2 : 10).

கர்த்தர் தமது சொந்த பிள்ளைகளுக்காகக் கவலைப்படு வதில்லையென யார் சொன்னது? கிறிஸ்தவ வாழ்க்கை மகிழ்ச்சியற்ற வாழ்க்கை என்று சொன்னது யார்? கிறிஸ்தவ வாழ்க்கை, கொடுப்பதற்கு எதையும் வைத்திருக்கவில்லை என கூறுவது யார்? கிறிஸ்தவர் எதிர்பார்க்க எதுவும் இல்லை என்று சொன்னது யார்? கிறிஸ்தவ வாழ்க்கையானது ஒரு மனிதன் வாழக்கூடிய மிகச் சிறந்ததும், மிக பயனளிக்கத்தக்கதுமான ஒரு வாழ்க்கை ஆகும். இப்படியாக, ஒருவன் தனது பாவங்களிலிருந்து விடுதலை அடைகிறான். நல்லதும் சமாதானமும் ஆன ஒரு வாழ்க்கை வாழ்கிறான். வாழ்வுக்கு ஏற்ற சகலத்தையும் பெறுகிறான்; அவனுக்கு சிறந்த எதிர்பார்ப்பு உண்டு. பொருளாதாரத்திலும், ஆவிக்குரிய காரியத்திலும் அவன் ஆசீர்வதிக்கப் பட்டவனாக இருக்கிறான். நற்செய்திக்கு அவன் கீழ்ப்படியும்போது இவை அனைத்தும் அவனுக்குக் கிடைக்கத் தொடங்குகிறது. உண்மையில், இதுவே பின்னர் அவனுடைய வாழ்வின் தொடக்கமாக இருக்கிறது. அளவற்ற ஆசீர்வாதங்களின் ஆரம்பமாக இது அமைகிறது.

**J.C. சோட்.**

பெண்கள் பகுதி

# "பிள்ளைப் பேற்றினால் அவள் இரட்சிக்கப்படுவாள்" என்பதன் அர்த்தம் என்ன?

"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும்" நிலைகொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" I தீமோ : 2 : 15.

மேலே கூறப்பட்டுள்ள வசனப் பகுதியை நாம் பார்க்கும் போது ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் ஏதேன் தோட்டத்தில் நடந்த ஆதாம், ஏவாள் இவர்களின் மீறுதலுக்கு நாம் அழைத்துச் செல்லப்படுகிறோம். கீழ்ப்படி யாமையினால் ஏவாள் செய்த பாவத்திற்காக தேவன் அவளுக்கு தண்டனையை கொடுத்தபோது, "நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையைப் பெருகப் பண்ணுவேன் என்றும், நீ வேதனையோடே பிள்ளை பெறுவாய் என்றும், அத்தோடு, "உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன் அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்று சர்ப்பத்துக்கு சாபமாகக் கூறினார். இந்த வசனம் ஒரு ஸ்திரீயின் மூலமாக மேசியா பிறப்பார் என்பதற்கு முதல் தீர்க்கதரிசனமாக கருதப்பட்டது. ஆகவே எந்தப் பெண்ணின் கீழ்ப்படியாமையினாலே பாவமும், மரணமும் உலகத்திற்குள் வந்ததோ, அதே பெண் இனத்தைச் சேர்ந்த கன்னி மரியாளிடத்தில் பிறந்த "இயேசு"வின் மூலமாக பாவத்திலிருந்து விமோச்சனமும் வர வேண்டியதாயிற்று. இந்த வகையாக, கீழ்ப்படிதலுள்ள மனுக்குலத்துக்கு இரட்சிப்பு என்பது பிள்ளைப் பேற்றின் வழியாக வரவேண்டியதாயிற்று.

ஆனால், இதோடு கூட, "பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" என்பதற்கு வேறு இரண்டு அர்த்தமும் உண்டு.

தேவன் ஆதாமுக்கும், அதைத் தொடர்ந்து ஆண் இனம் முழுமைக்கும் குடும்பத்தின் சரீரத் தேவைகளைச் சந்திக்கும் பொறுப்பை கொடுத்தபோது, பெண்ணுக்கு குடும்பத்தையும், பிள்ளைகளையும் பராமரிக்கும் பொறுப்பையும் கொடுத்தார். I தீமோத் 5:14ல் பார்க்கும் போது, பெண்கள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை

நடத்தவும்'' அறிவுறுத்தப்படு கிறார்கள். மேலும், தீத்து 2-ம் அதி காரம் 4,5 ஆகிய வசனப் பகுதி களில் முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லும் வகையில், “பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத் திலும், தங்கள் பிள்ளைகளிடத் திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர் களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய்... இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

தேவனால் கொடுக்கப்பட்ட இந்த வேலைகளை அவருக்குப் பிரியமுண்டாக்கும் வகையில் நிறைவேற்றினால் அப்பெண்கள் தேவனாலே அங்கீகாரம் பெற முடியும். குடும்பத்தையும், பிள்ளை களையும் கவனித்துக் கொள்ளும் படியான தேவ கட்டளைக்கு கீழ்ப்படிவதென்பது ஒவ்வொரு பெண்ணாலும் கட்டாயம் செய்து முடிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில் பெண்ணுக்கான மீட்பின் திட்டத்தில் இதுவும் ஒரு பங்காகும். இப்படியாக ஸ்திரீ யானவள் விசுவாசத்தில் நிலைத் திருந்தால் பிள்ளைப் பேற்றி னாலே இரட்சிக்கப்படுவாள்.

பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் என்பதற்கு வேறு ஒரு அர்த்தத்தையும் நாம் சொல்லமுடியும். குழந்தைகளை பராமரித்து வளர்க்கும் காலங் களில் அவளுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அதிக மான தடைகளும், இடையூறு களும் பிள்ளைகளாலேயே அனு பவிக்க நேரிடும். தன் குழந்தை களை ஆராதனைக்கு அழைத்துச் செல்லும் ஒரு பெண் தொடர்ந்து அந்தக் குழந்தைகள் மீது கவனம் வைத்து அவர்களுடைய அழுகை, துள்ளல், நெளிதல், சத்தம், பசியாற்றுதல் போன்ற காரியங்களைக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. அங்கே அவளால் தடை இல்லாமல் ஆராதிக்க முடிவதில்லை. ஒரு வேளை அவள் சபை கூடி வருதலை விட்டு விடாமல் அநேக ஆண்டுகளாக ஆராதனையிலே ஒழுங்காக பங்கு பெற்று வந்தாலும், குழந்தைகள் நிமித்த மாக ஆராதனைக்கேற்ற ஒரு சரியான மனநிலையைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

குழந்தைகள் மற்றும் சிறார்களை வளர்ப்பதில் உள்ள பிரச்சனைகள் எப்படிப்பட்ட வைகளாக இருக்கும் என்பது தேவனுக்கு முன்பே தெரியாத தல்ல. குழந்தைகளின் அக்காரி யங்களை கவனிக்கும்படியான விசேஷித்த குணாதிசயங்களை சாந்தம், பொறுமை, மென்மை யான இருதயம், குறிப்பால் உணர்ந்து கொள்ளும் தன்மை, எந்நிலையிலும் காட்டப்படும் அன்பு ஆகியவைகள் படைப் பிலேயே பெண்களுக்கு கொடுக் கப்பட்டுள்ளது. இது பெண் களுக்கே உண்டான பொதுவான பண்புகள். ஆண்களுக்கு இந்த

அரிய பண்புகள் கொடுக்கப்படவில்லை. ஒரு தாய், தன் தாய்மைக்கான காரியங்களை அன்றாடம் செய்யும்பொழுது தேவன் தனக்கு கொடுத்துள்ள திறமைகளில் வளர்ந்து, பிள்ளைகளை கவனிக்கும் காரியத்தில் அன்பிலும், பொறுமையிலும், ஞானத்திலும் மிகவும் பெருக முடியும். ஆகவே ஒரு பெண். தேவன் தனக்கு கொடுத்துள்ள வேலையைச் சரியாகச் செய்வதின் மூலம் அவள் தன் வாழ்க்கையை சுபிட்சமாக்குவது மல்லாமல், தன் பக்தி நிலையையும் விருத்தியடையச் செய்ய முடியும்.

ஆனால் பிரச்சனையைத் தரும் அந்த நாட்களிலெல்லாம் அவள் உண்மையுள்ளவளாக இருக்க வேண்டும். தொந்தரவில்லாமல் தேவனை ஆராதிப்பதற்கு சமயம் கிடைக்காவிட்டாலும், வசனங்களைப் படித்து தன் ஆவிக்குரிய பசியைத் தீர்ப்பதற்கு தேவையான நேரம் கிடைக்காவிட்டாலும், தன் ஆவிக்குரிய எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கு முடியாவிட்டாலும் அவள் தேவனுடன் கூடிய தன்னுடைய தனிப்பட்ட உறவை சரியாக வைத்துக் கொள்வதற்கு கவனமுள்ளவளாக இருக்க வேண்டும். அவள் தாய்மைக்குண்டான சவாலை ஏற்றுக் கொள்ளக் கூடியவளாக இருக்க வேண்டியிருப்பதால் விசுவாசம், அவர் வழிநடத்து தலை சார்ந்திருப்பது, அவர் மீது வைத்திருக்கும் அன்பு, பரிசுத்தம் போன்றவற்றை அவள் கற்றுக் கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் ஏற்று இவள் வாழும் போது ஒரு சுயக் கட்டுப்பாட்டு வாழ்க்கையை வாழ பழகிக் கொள்கிறாள். இவை களையெல்லாம் ஏன் இவள் கடைப் பிடிக்கவேண்டும்? இவ்வளவு சவால்களுக்கு மத்தியிலும் தேவனோடு தனக்கிருக்கும் உறவை தன் வாழ்க்கையின் மிக முக்கியமான பங்காக ஏற்று வாழ்ந்து காட்டாத பட்சத்தில், தன் பிள்ளைகளுக்கு உயிரோட்டமுள்ள விசுவாசத்தை அவளால் கொடுக்க முடியாது. ஆனால், தன்னுடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய வழிகாட்டுதலைக் கொடுக்கும் போது, அவள் தன்னுடைய வளர்ச்சியில் பாடுபட நேர்ந்தாலும் கூட, அவள் ஒரு முழுமையான ஆவிக்குரிய தன்மையப் பெற்றுக் கொள்ள உதவும். எப்படியெனில், அவள் தன்னுடைய வாழ்க்கை யிலும், விசுவாசத்திலும், தேவ னுக்கு ஒப்புக் கொடுத்தலிலும் வரும் எல்லாவிதமான சவால் களையும் சந்தித்து வெற்றி பெற முடியும்.

"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்".

**B B சோட்** **RR நாயகம்.**

# "மன மேட்டிமை"

"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோம. 15 : 4). வேதாகமத்தின், சம்பவங்கள் மகத்தான பாடங்களை எல்லோருக்கும், குறிப்பாக, கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கிறது. 'மனமேட்டிமை' என்பது மனிதனுக்கு எப்பொழுதும் ஒரு பிரச்னையாகவே இருந்துள்ளது. மேட்டிமையானவர்களை தேவன் கண்டித்துத் தண்டித்துள்ளார்.

*<u>இங்கே, அதற்கான சில உதாரணங்கள்.</u>*

**1. யூதாவின் ராஜாவாகிய உசியா : (II நாளா. 26)**

இவன் 16 வயதிலே அரியணை ஏறினான். இவனுடைய மார்க்க ஆலோசகனாகிய சகரியாவின், திறமையான வழிநடத்துதலின்படியாக, ஞானமாக அரசாட்சி செய்து தேவனுக்குப் பிரியமானவனாக இருந்தான். தன்னை உண்டாக்கினவரை உண்மையாகத் தொழுது கொண்டு, அதன் பயனாக ஏராளமான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டான். "அவன் கீர்த்தி வெகு தூரம் பரம்பிற்று; அவன் பலப்படுமட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அனுகூலமுண்டாயிற்று". (வ.15)

இதற்குப் பிறகு, வேகமாக விழுந்தான். அவனுக்கிருந்த புகழும் வல்லமையும் அவனுக்கு தலைக் கனத்தைக் கொடுத்தது. அவன் தனது செயலால் கர்த்தரை நிந்திக்கத் தொடங்கி விட்டான். " . . . . தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகி மீறுதல் செய்து, தூப பீடத்தின் மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசித்தான். (வ.16). இவனின் இந்த துணிகரச் செயலை ஆசாரியனாகிய அசரியாவோடு, வேறு எண்பது ஆசாரியர்கலும் சேர்ந்து எதிர்த்தனர். ஏன்? ஆரோனின் வம்சத்திலே வந்த ஆசாரியர்கள் மாத்திரமே செய்ய வேண்டுமென்றிருந்த வேலையைச் செய்ய இவன் விரும்பினான்.

*<u>இவனுக்குக் கிடைத்த தண்டனை என்ன தெரியுமா?</u>*

(i) தேவனுடைய ஆசீர்வாதம், இவனிடமிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. (வ.18).

(ii) அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் கண்டு, ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டான். (வ. 19, 21)

(iii) ராஜாக்களுடைய கல்லறையில் அவன் அடக்கம் பண்ணப்படவில்லை. (வ.21).

**2. பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் : (தானி. 4).**

நேபுகாத் நேச்சாருடைய இரண்டாவது கனவு தானியேலின் புத்தகம் நான்காம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. அங்கே அவன் எப்படி கிருபையினின்று விழுந்து போவான் என்று காட்டப்பட்டுள்ளது. நித்தியமானவர் அவருக்கு மகிமையையும், வல்லமையையும், செழிப்பையும் கொடுத்திருந்தார். ஆனால், அவன் இறுமாப்படைந்து, தேவனுடைய மாட்சிமை பொருந்திய வல்லமையை அங்கீகரியாமல், எல்லாம் தன்னுடைய பலத்தினால் நடக்கிறது என எண்ணினான். அவனுக்கு ஏற்பட்ட மமதை அவனை எப்படி எண்ண வைத்தது என்று பாருங்கள். "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்" (வ.30) இந்த வார்த்தைகள் அவன் வாயிலிருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, ஏழு ஆண்டுகள் கடந்து போகமட்டும், வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய் என்று சொல்லியது. (வ. 31, 32).

*அவனுக்குக் கிடைத்த தண்டனைகளைக் கவனியுங்கள்*

(i) மனித சமுதாயத்திலிருந்து, தள்ளப்பட்டான்.

(ii) கிருபை அவனிடமிருந்து முற்றிலும் நீக்கிப் போடப்பட்டது –

மகிமை பொருந்திய ஒரு ராஜா மிருகம் போல நடந்தது எவ்வளவு கேவலம் பாருங்கள்.

**3. கோலியாத் : (I சாமு. 17)**

கோலியாத், அகந்தையோடு தாவீதுக்கு சவால் விட்டான். "என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்" என்றான். (வ. 44). ஆஜானுபாகுவான சரீர அமைப்புக் கொண்ட வீரனாகிய கோலியாத், தாவீதை ஏளனமாக எண்ணி எடை போட்டான். ஆனால், நடந்த சண்டையில், அவன் தாவீதுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. கோலியாத்தின் தலையை தனக்குக் கிடைத்த வெற்றிக் கோப்பையாக, வீட்டிற்கு எடுத்துச் சென்றான் தாவீது.

இவை தரும் பாடங்கள் : நமக்கு வாழ்க்கையில் கிடைக்கும் சரீர ஆசீர்வாதங்கள் அனைத்தும் சிருஷ்டிகரிடமிருந்தே வருகிறது என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். அவருடைய சித்தத்திற்கிசைவாக அவைகளை அவர் எப்பொழுது வேண்டுமானாலும் விலக்கிக் கொள்ள முடியும். மனமேட்டிமையின் விலை கொடுப்பதற்கு மிக அதிகம். ஆகவே, மனமேட்டிமை கொள்ளாமலிருப்போம்.

மனமேட்டிமையுள்ள கிறிஸ்தவன் தன் பழைய நிலைக்கே திரும்பிச் செல்ல வாய்ப்புண்டு.

**God Fried Kwao.**


# அருமையான வாய்ப்பு

*பரிசுத்த ஆவியானவரின் பணி* (170 பக்கங்கள்) மற்றும் *புதிய ஏற்பாட்டு ஆராதனை* (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

*புத்தகம் முற்றிலும் இலவசம்* ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 15

முகவரி : *தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
தபால் பெட்டி எண் - 27
காங்கயம் - 638 701.

*குறிப்பு : தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# தலைமையாளர் கண்டிப்பாக ஆவிக்குரிய மனிதனாக இருத்தல் வேண்டும்

சபையாகிய மணவாட்டி தமக்கு தேவனால் கொடுக்கப்பட்ட பணியை செய்து முடிக்க வேண்டுமானால் கண்டிப்பாக ஆவிக்குரிய தலைமை தேவை.

"அவர்கள் தங்கள் வியாபாரத்தை நடத்துவதுபோல், சபையை நடத்த முயற்சிக்கிறார்கள்".

"அவர் தம்முடைய மேலாளருக்கு கட்டளையிடுவதைப் போல் எண்ணிக் கொண்டிருக்கிறார்". இப்படி சிலரைப் பற்றிய விமர்சனங்களை கேட்கிறோம். ஒருவேளை உலகப் பொருள்கள் சம்பந்தமான காரியங்களில் வியாபார ரீதியாக செயல்படுவது சரி. ஆனால் ஆவிக்குரிய காரியங்களில் இது சரிபட்டு வராது. மாறாக, ஆவிக்குரிய சிந்தை கண்டிப்பாகத் தேவை.

மேற்கண்ட மேற்கோள்கள், சபையிலிருக்கும் தலைமையாளர் களைப் பற்றியதாகும். ஆவிக்குரிய நிலையில் செயலாற்றுவதற்குப் பதில் அதிகாரிகளாக (executives) செயல்படுவதைப் பிரதிபலிக்கிறது.

சபையானது இயல்பாகவே ஆவிக்குரியது. ஆகவே தான் தலைமையை ஏற்போர் ஆவிக்குரிய மனநிலையையுடையவராயிருத்தல் வேண்டும். கிறிஸ்தவ தலைமையாளர் மீட்படைந்த ஒருவர். அவர் தொடர்ந்து மாமிசத்தோடு போராடுபவர் (கலா 5 : 7; ரோமர் 7 : 14 – 25) ஒரு வேளை சில இயற்கையான குணங்கள் அவரிடம் காணப்படலாம். இருந்தாலும் அவைகள் யாவும் நல்லவைகளாகவே இருக்க வேண்டும். அவைகளை ஆவிக்குரிய பணிக்காக சபையில் பயன்படுத்துதல் வேண்டும். சவால் என்னவென்றால், உள்ளான ஆவிக்குரிய மனிதனில் கட்டுப்படுத்துதல் வேண்டும். தேவனுக்கு அர்ப்பணித்தலின் மூலமாக, தலைமையாளர் தம்முடைய தகுதியை கையாண்டு வெற்றியடைய வகை தேடுதல் வேண்டும். ஆவிக்குரிய மனிதனுடைய கரங்களில் அவைகள் ஒரு புதிய விளக்கத்தையும் பொருத்தத்தையும் அளிக்கும். அவைகள் (இயல்பான குணாதிசயங்கள்) ஆவிக்குரிய மனிதனை வழி நடத்தாது – ஆனால் ஆவிக்குரிய மனிதன் அவைகளை வழி நடத்துவார்.

சபையில் தலைமையாளர் ஏன்? கண்டிப்பாக ஆவிக்குரிய மனிதனாக இருக்க வேண்டுமென்பதற்கு அநேக முக்கிய காரணங்கள் உண்டு. அவைகளில் சிலவற்றை தொடர்ந்து பார்ப்போம்.

1. அவர் ஆவிக்குரிய நிலையில் மறுபடியும் பிறந்த அனுபவமுடையவர் (யோவான் 3 : 1–5). இதன் பொருள், அவருடைய வாழ்க்கை ஒரு புதிய அர்த்தத்தையும் புதிய நோக்கத்தையும் உடையதாக மாற்றப்பட்டு இருக்கிறது. ஆவிக்குரிய குடும்பத்தில் ஒரு அங்கமாக இருப்பதால், பரலோகத்தின் தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் பொறுப்பாளியாகிறார்.

2. அவர் ஆவிக்குரிய ராஜ்யத்தில் இருக்கிறார். அது அவர் பணியாற்றக்கூடிய எல்லைகளையும் தலைமைத்துவத்தின் தனித்தன்மை யினையும் பெற்றிருப்பதைக் காட்டுகிறது. இந்த பகுதிகளில்தான் தன்னுடைய முதன்மையானவைகளை ஏற்படுத்தி ஆவிக்குரிய வளர்ச்சிக்கு திட்டமிடுவார்.

3. ஆவிக்குரிய சரீரத்திலுள்ள மற்ற அங்கத்தினர்களோடு அவருடைய பணி சேர்ந்துள்ளது. அவர் அவர்களை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வளருவதற்கு உதவி செய்வார். சரீரத்தின் அவயவங்களுக்கு சில முக்கிய தேவைகள் உண்டு (I கொரி 12 : 12 – 27). இவைகளில் ஆவிக்குரிய சிந்தையுள்ளவன் மட்டுமே கவனமாக இருந்து உதவி செய்ய முடியும்.

4. தேவன் இவைகளை எதிர்பார்க்கின்றார். பவுல் எழுதும் பொழுது "மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக் கீழ்படியாமலும் கீழ்படியக் கூடாமலும் இருக்கிறது". (ரோமர் 8 : 6,7). என்கிறார்.

5. பின்பற்றுபவருக்கு வழிகாட்டுதலும் ஊக்கமும் தேவை. அதுவும் ஆவிக்குரிய மனிதரிடமிருந்து அவர்களுக்கு வருதல் வேண்டும். இது உண்மையே! காரணம், அவர்கள் உலக உபாயங்கள் எல்லாவற்றையும் முறியடித்து வெற்றி வாகை சூட பிரயாசப்படுபவர்கள். உலக மனிதர், ஆவிக்குரிய காரியங்களில் வழி காட்ட முடியாது.

6. சபையின் சுவிசேஷ பணியும், இழந்து போனவரை தேடுவதும் ஆவிக்குரிய தலைமையாளர்களைக் கொண்டுதான் முடியும். இதுவும் சரியே. " . . . . ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்" (ரோமர் 8 : 5).

7. கிறிஸ்துவின் முன்மாதிரியை பினபற்றுவது. காரணம் கிறிஸ்துவே தலையாகவும், பிரதான தலைமையாளராகவும் சபையில் இருக்கிறார். (கொலோ 1 : 18). ஆவிக்குரிய ராஜா (கிறிஸ்து), தம்முடைய ஜனத்தை உலக சிந்தையுள்ள மனிதன் நடத்துவதை விரும்பமாட்டார்.

## ஆவிக்குரிய தலைமையாளரின் குணபண்புகள்

ஆவிக்குரிய தலைமையின் தேவையென்பது விருப்பத்தின் அடிப்படையிலல்ல. இதிலிருந்து ஆவிக்குரிய தலைமையாளருடைய வாழ்க்கை நடைமுறையென்ன என்றும் அவருடைய சிந்தை எப்படிப் பட்டதென்பதையும் இதன்மூலம் பார்க்கலாம். "ஆவிக்குரிய தன்மை" என்றால் ஒரு மனிதன் எதைச் செய்கிறானோ அதுவல்ல; மாறாக அவன் என்னவாக இருக்கிறானோ அதுவே. அவனுக்குள்ளிருப்பதை அவன் செயல்படுத்துகிறான். (மாற்கு 7 : 14 – 23). ஒருவேளை சில காரியங்களை சிலர் வெளியரங்கமாக செய்யலாம்; அதைக் கொண்டு அவரை ஆவிக்குரிய மனிதனாக தீர்க்க முடியாது. (வெளி 2 : 1 – 7). சில குண பண்புகளையும் தேவனுடைய உன்னத பணிக்கான தாகத்தையும் படித்து பார்ப்போம். மிகவும் கவனமாக படியுங்கள்.

அவர், "தேவனையும் அவர் சித்தம் தம்முடைய வாழ்க்கையில் என்னவென்பதையும் அறிந்துள்ளவர்" (யோவான் 17 : 3). தாம் விசுவாசிக்கிறவரை இன்னாரென்று அறிந்துள்ளார். எப்படியென்றால், தொடர்ந்து வேதாகமத்தை படித்தலின் மூலமாக.

அவர் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடு பவர் (மத் 6:33). சபைக்கு முன்னதாக அவருக்கு வேறு எதுவும் வராது.

அவர் எதைச் செய்தாலும் அதில் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையோடு கூட செய்யும் வழியை காணுபவர் (பிலி 2 : 5 –8). எந்தச் சூழ்நிலையிலும் இயேசு கிறிஸ்துவைப் போல காணப்பட வாஞ்சிப்பவர்.

மேலானவைகளின் தன் மனதை வைப்பவர் (கொலோ. 3 : 1, 2) ஆவிக்குரிய தலைமையாளர், தேவனுடைய உதவியையும் வழிகாட்டுதலையும் எப்பொழுதும் எதிர்பார்த்திருப்பவர்.

சரியானபடி சிந்திப்பவர், (நீதி 23 : 7; பிலி 4 : 8). அவருடைய நினைவுகள் எப்பொழுதும் நல்லவைகளில் நாட்டமுடையவைகளாகவே காணப்படும். (சங்கீதம் 119 : 97 – 101)

அவர் வசனத்தின்படி செய்பவர் (யாக் 1 : 22). வசனத்தைக் கேட்பவர்களுக்கு இது உண்மைச் சோதனை. வல்லமையும் ஆசீர்வாதங்களும் அதன்படி (வசனத்தின்படி) நடப்பவர்களுக்கே உண்டு. (என்றா 7 : 10).

அவர் உலகத்தின் வேஷத்தை தரித்துக் கொள்ள மாட்டார். (ரோமர் 12 : 1, 2). அவருடைய வாழ்க்கைத் தரம் இயேசுவையும், நீதியையும் மாதிரியாகக் கொண்டிருக்கும்.

அவர் தம்மை பின்பற்றுபவருக்கு நல்ல முன் மாதிரியாக இருக்க பிரயாசப்படுவார் (I தீமோ 4 : 12). சொல்லுவதோடு மாத்திரமல்ல சொல்லுவதை செய்து காட்டுபவர்.

அவர் ஆவியின் கனிகளை நிரம்ப கொடுப்பவர் (கலா 5 : 22 – 26) அனுதின வாழ்க்கையை இவைகளினடிப்படையில் அமைத்துக் கொண்டு வாழ முயற்சிப்பார்.

அவர் தேவனுடைய வார்த்தையின்படி நடப்பதினால், ஆவியின் படி நடப்பவர் (ரோமர் 8 : 14, யோவான் 8 : 32).

தினந்தோறும் மனம் புதிதாவதினால் மறுரூபமாபவர் (எபேசி 4:23) புதிய மனுஷனை தரித்துக் கொள்வதினால் இது சாத்தியப்படும்.

அவருக்கு தேவன் பேரில் முழு விசுவாசம் காணப்படும் (எபி 11:6) தேவனுடைய மக்களை நடத்துவதில், தேவனுடைய வல்லமையை முழுமையாக நம்புபவர்.

அவர் மற்றவர்களுக்கு ஊழியம் செய்பவர் (மாற்கு 10 : 35 – 45) இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பவர்.

அவர் ஒரு சிறந்த ஜெப வீரராக விளங்குபவர் (I தெச 5 : 17) எப்பொழுதும் ஞானத்திற்காக ஜெபித்து, தேவன் விரும்பும் வகையில் அவருடைய ஜனங்களை நடத்துபவர்.

ஆவிக்குரிய மனிதர்களால் நடத்தப்படும் பிராந்திய சபைகள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவைகளாக இருக்கும். ஆவிக்குரிய மனிதர்களால் நடத்தப்படும் சபைகளுக்கு அநேக "குமாரர்களும் குமாரத்திகளும் மகிமையில் கொண்டு வரப்படுவார்கள்".

நாம் பிசாசை வெல்ல, சரீர பிரயாசங்களோ, மனித ஈடுபாடுகளோ, அறிவியில் கண்டுபிடிப்புகளோ, பணமோ, வாக்குவாதங்களோ, பயமுறுத்தல்களோ, வாக்குச் சீட்டுகளோ பயன்படாது. மாறாக ஆவிக்குரிய போராயுதங்களைக் கொண்டு ஆவிக்குரிய மனிதர்களால் தான் பிசாசை வெற்றி கொள்ள முடியும்.

தேவனே! எங்களுக்கு சில ஆவிக்குரிய மனிதர்களை தாரும் என்று நாம் ஜெபிப்போம்.

J.J. Tuner

*வே. தானியேல் துரைராஜன்*
திருச்சி – 1.

# ஆவியின் கனி

## சமாதானம்

இந்நாட்களில் வெளியாகும் பத்திரிக்கை, வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்திகளை கவனித்தால் உலகத்தில் எங்கு பார்த்தாலும் போராட்டங்கள், கலவரங்கள், சண்டைகள் போன்ற செய்திகள் தவறாமல் இடம் பெற்று வருகின்றது. அனேக குடும்பங்களிலும் அடிக்கடி சண்டைகளும் குழப்பங்களும் ஏற்படுவதையும் பார்க்கலாம். உலகில் எங்கு பார்த்தாலும் சமாதானமற்ற நிலை பெருகிவருகின்றபடியால் உலக அளவில் சமாதானத்திற்கென்று பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொறு தனிப்பட்ட மனிதனின் சமாதானமுள்ள வாழ்க்கையே உலக சமாதானத்திற்கு அடிப்படையாக இருக்கின்றது. ஒரு மனுஷனுடைய சமாதானமில்லாத வாழ்க்கைக்கு சுயநலம் ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. தீமையினால் நிறைந்திருக்கும் மனித சமுதாயத்தில் சமாதானத்தை விரும்பி பலர் பல இடங்களை நாடி செல்லுகின்றனர். இதுவும் ஒருவிதமான சுயநலமே. சமாதானத்தை நாடி நாம் எங்குமே செல்ல வேண்டிய அவசியமில்லை. நம்மை இம்மண்ணில் உண்டாக்கினவரை அறிந்து அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்பு கொடுத்தால் அவர் நமக்கு மெய்யான சமாதானத்தை தந்தருள்வார். "அவரே சமாதானத்தின் கர்த்தராய் இருக்கின்றார்" (I தெச. 3 : 16). அவருடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புகொடுத்த சீடர்களுக்கு இயேசு : "சமாதானத்தை உங்களுக்கு வைத்து போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கின்ற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று கூறினார் (யோ. 14 : 27).

அவருடைய சித்தத்திற்கு நம்மையும் ஒப்பு கொடுத்து நாமும் சமாதானமுடன் வாழ நம்மை குறித்து அவருடைய சித்தம் என்ன? "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை யுடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (I தீ 2 : 4). சத்தியத்தை அறிவதால், சத்தியம் மனுஷனுடைய சமாதானமின்மைக்கு காரணமாயிருக்கும் தீய செயல்களை அவனுக்கு உணர்த்தி அதன் அடிமைதனத்திலிருந்து அவனை முற்றிலுமாய் விடுதலையாக்கும் (யோ 8 : 32).

சத்தியம் என்றால் என்ன? உங்களை உண்டாக்கினவரின் வார்த்தைகளே (வசனங்களே) சத்தியம் (யோ 17 : 17). வேதமே அவருடைய வசனம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (II தீமோ 3:16−17) சங்கீத புஸ்தகத்தை எழுதின தாவீது கூறுகிறார்" வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறலில்லை" என்று (சங் 119 : 165) வேத வசனம் மனுஷனுடைய கால்களுக்குத் தீபமும், அவனுடைய பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங் 119 : 105) "கர்த்தருடைய கற்பனை (வசனம்) தூய்மையும், கண்களைத் தெரிவிக்கிறதுமாயிருக்கிறது" (சங் 19 : 8).

பிரச்சனைகள் நிறைந்த சமுதாயத்தில் ஒருவன் சமாதானத்துடன் வாழ வேத வசனம் அவனுடைய கண்களை தெளிவாக்கி, அவன் தேவனுடைய பிள்ளையாகும் உரிமையை அளித்து, இடறலற்ற பாதைகளை காட்டும். அவர்களுக்கு சமாதானம் உண்டு அவர்கள் மற்றவர்களையும் சமாதானம் பண்ண கூடும். இயேசு "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்" என்று கூறுகிறார் (மத் 5 : 9).

சங்கீதக்காரனாகிய தாவீது கூறுகிறார் "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" என்று (சங் 1 : 2−3) வேதத்தை நேசிக்கிறவனும், தன்னலமற்ற மரத்தை போல அநேகருக்கு பயனுள்ளவனாக வாழும் பாக்கியத்தை பெறும்படி தேவன் அவனை ஆசீர்வதிப்பார்.

அப்போஸ்தலனாகிய பவுல் "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று கூறுகிறார் (ரோ 12 : 18) நீங்களும் சமாதானத்துடன் வாழ வேத வசனங்களை நேசித்து அதற்கு உங்களை ஒப்பு கொடுங்கள், மேலும் உங்களுடைய சமாதானத்திற்கு இடையூறாக இருக்கும் எந்த பிரச்சனையானாலும் "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்போது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்து கொள்ளும்" (பிலி 4 : 6 − 7). "தேவ சமாதானம் உங்களோடிருப்பதாக"

**ஹென்றி மோகன், *நீலகிரி.***

# இவருக்குச் செவி கொடுங்கள்

சிறிது நேரத்திற்கு உங்களை சீமோன் பேதுருவாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இப்பொழுது, நீங்கள் இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட பனிரெண்டு பேரில் ஒருவர். அவரைப் பின்பற்றும் படியாகவும், அவருக்காக வாழும்படியாகவும், நீங்கள் உங்கள் தொழிலையும், உங்கள் குடும்பத்தையும் விட்டு வந்துள்ளீர்கள். இந்த நாளிலே உங்கள் குருவானவர், உங்களோடு யாக்கோபையும், யோவானையும் கூட்டிக் கொண்டு, ஜெபிக்கும்படியாய் ஒரு மலைக்கு ஏறிப்போகிறார். இயேசுவோடு சேர்ந்து, நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது தூங்கி விடுகிறீர்கள். ஒருவேளை மலைக்கு ஏறிப்போன களைப்பாக இருந்திருக்கும்.

தூக்கத்தில் இருந்த நீங்கள், திடீரென திடுக்கிடுகிறீர்கள். கண்களைத் தேய்த்து விழித்துப் பார்த்தால், இயேசு முற்றிலும் மாறுபட்டவராக காட்சி தருகிறார். பனிக்கட்டி போன்று வெண்மையாக இருந்தார். அவரின் முழுத் தோற்றமும் பிரகாசித்தது. அது மாத்திரமல்ல, மோசேயும், எலியாவும் அவரோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு வர இருக்கும் தன்னுடைய மரணம் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டுமென்று தெரியாமல், இயேசுவை நோக்கி, "நாம் இங்கேயே இருப்பது நல்லது. மூன்று கூடாரத்தை இங்கே போடுவோம். உமக்கென்றும், மோசேக்கொன்றும், எலியாவுக்கொன்றுமாக" என்று சொல்கிறீர்கள். இப்படி பேசி இன்னும் உங்கள் இருதயத்தின் எண்ணங்களையெல்லாம் வெளிக் கொண்ருவதற்கு முன்பாக, ஒரு ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிட்டு; மேகங்களிலிருந்து இந்த விதமாக ஒரு சத்தம் பிறந்தது. "இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன். **இவருக்குச் செவி கொடுங்கள்"**. (மத். 17 : 1 – 5).

நீங்கள், உங்களை இன்னும் ஒரு பேதுருவாகவே பார்க்க முடிந்தால், நடந்த எல்லாச் சம்பவங்களும் உங்களை ஒரு அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்காதா?

சரி, நீங்கள் இயேசுவுக்கு சொன்ன ஆலோசனையில் என்ன தவறு நேர்ந்தது?

முதலாவதாக, இங்கே, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று நீங்கள் கொள்கை இந்த மலை தங்கி வாழ்வதற்கான ஒரு இடம் என்ற ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தியது. காற்றோட்டமான, ஜன சந்தடியற்ற, மடாலயம் போன்ற இந்த மலையுச்சி குடியிருப்புக்கு ஏற்றது என்று நினைக்க வைத்தது. ஆனால், இயேசுவோ, அப்போஸ்தலர்களோ மலையுச்சியில் இருக்க வேண்டுமென்பது, தேவனுடைய திட்டத்தில் ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, அவர்கள் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளும் சமவெளியில் இருந்தது.

இரண்டாவதாக, சொன்ன ஆலோசனை தவறென்பதற்கு வேறொரு காரணம், அது மோசேயையும், எலியாவையும் இயேசுவுக்கு இணையானவர்களாகக் காட்டியது. அவர்கள் இருவரும், மகத்தான மனிதர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இயேசுவோ, மாம்சத்தில் இருந்த தேவன். (யோவா. 1 : 1, 14).

அடுத்து, பேதுருவின் ஆலோசனையில் இருந்த மிக முக்கியமான தவறு என்னவெனில், **“அவன் கவனிக்க வேண்டிய நேரத்தில் பேசிக் கொண்டிருந்தது”**. அங்கே, தேவனுடைய பதில் இது தான். “இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். **இவருக்குச் செவி கொடுங்கள்”** என்பது. நம்மனைவருக்கும், அடிக்கடி ஏற்படுகிற பிரச்னை இதுதானே? பேதுருவைப் போலவே, நாம் சொல்வதற்கு ஏதோ இருக்கிறது என நினைக்கிறோம். நமக்கு ஏற்படுகிற சகல காரியங்களிலும், நாம் ஆலோசனை சொல்ல ஏதோ உண்டு என்று எண்ணுகிறோம். ஆனால், நாம் என்ன சொல்லவேண்டுமென்று சரியாகத் தெரியாத பொழுது, பேசாமல் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம். தேவன், இரண்டு காதுகளையும், ஒரு வாயையும் கொடுத்திருப்பதில் ஏதோ அடங்கியிருக்கிறது என யாரோ ஒருவர் சொன்னதில் உண்மை இருக்கிறதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

புதிய ஏற்பாட்டை எழுதின ஆசிரியர்களை இயேசுவும், பரிசுத்த ஆவியானவரும் வழி நடத்தினபோது, அவர்கள் வெளிப்படுத்தின பெரியதொரு உண்மையென்னவெனில், “கேட்பதிலே” கவனமாக இருக்கவேண்டுமென்பது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு, சொல்வதைப் பாருங்கள். “ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.” (யாக். 1 : 19).

அடுத்தது என்ன சொல்ல வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் அதிக குறியாக நலம் இருந்தபடியால், கேட்க வேண்டுமென்று தேவன்

எதிர்பார்த்த எவ்வளவு காரியங்களை நாம் தவற விட்டிருப்போம்? அநேகர், காதுகளிலிருந்தும் கேட்பதில்லை. நமக்கு, உண்மையாகவே பயன்தரக் கூடிய முக்கியமான காரியங்களை கற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு, கேள்வியிலே நாம் பக்குவப்படவில்லை.

இயேசுவும், மற்ற மூவரும் மலையிலிருந்து இறங்கி வந்த போது, யோவான் ஸ்நானகன் தான், முந்தி வர வேண்டிய எலியா என்று இயேசு, விளக்கிச் சொன்னதை கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அவர் அவர்களை நோக்கி, "மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்" என்று கட்டளையிட்டார்.

தொடர்ந்து, அவர்கள் மலையடிவாரத்தைத் தொடுவதற்கு முன், ஒரு அலறலின் இரைச்சல் காதுக்கெட்டியது. அங்கே, பிசாசுகளைத் துரத்தும் வல்லமையை இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட சீடர்களிடம், பிசாசு பிடிக்கப்பட்டிருந்த ஒரு சிறுவன் கொண்டு வரப்பட்டிருந்தான். அவர்கள், தங்களால் ஆன மட்டும் முயன்றிருந்தும், அவைகளைத் துரத்த முடியவில்லை. சோர்ந்து போன தகப்பன், மகனை இயேசுவிடம் கொண்டு வந்தான். "ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும்" என்பதே அவன் மன்றாட்டு. இயேசு அந்த இளைஞனை சொஸ்தமாக்கி, தங்களுடைய விசுவாசக் குறைவுக்காக சீடர்களைக் கடிந்து கொண்டார்.

பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய இவர்களை, விசுவாசத்தில் வளரச் செய்வதற்காகத் தான் இயேசு மலைக்கு கூட்டிப் போனாரோ? அவர்களின் பணி பள்ளத்தாக்கிலே இருந்தது. ஆனால் அந்தப் பணியை விசுவாசத்தோடும், பெலத்தோடும் செய்வதற்கான வல்லமை, மலையின் மீதான ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பதிலுமே கிடைக்கிறது. ஆகவே, நாம் ஒவ்வொருவரும், இன்று, ஆவியில் வல்லமை பெற்ற மக்களாக இருக்க வேண்டுமானால் மறுரூப மலையைத் தேடிப் போய் ஏறத் தேவையில்லை. மாறாக, கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டிற்கு செவி கொடுத்தால் போதுமானது. இது மிகவும் எளிமையானது. ஆனால், ஒப்புக்கொடுத்தல் தேவை. ஆகவே, ஒப்புக் கொடுப்பதின் மூலம், கிறிஸ்துவுக்குச் செவி கொடுப்போம்.

Leon Barnes EZSR

# தேவனுடைய வார்த்தை

தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. தேவனுடைய வார்த்தையை வாசிக்கும் பொழுது ஒருமனப்பட்டு, கவனத்துடனும், பக்தி சிரத்தையுடனும் வாசிக்க வேண்டும். கவனத்தை வேறு பக்கம் வைத்துக் கொண்டு ஏனோ தானோவென்று, கடன் முறைக்காக வாசித்தால் எந்த பிரயோஜனமும் கிடைக்காது. விளங்கிக் கொள்ளவும் முடியாது.

முன் கூட்டியே தவறாக கற்பனை செய்து கொண்டு வாசித்தாலும், எந்த நன்மையும் கிடைக்காது. தேவனுடைய வசனம் என்ன சொல்லுகிறதென்று கவனித்து அதன்படி நடக்க வேண்டும். ஒரு காதால் கேட்டோ அலலது வாசித்தோ விட்டுவிட்டால் எந்தவிதமான மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. வார்த்தை இருதயத்தில் சென்றதும், சிந்தித்து அதன்படி செயல்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையின் மேல் ஒரு வாஞ்சை வேண்டும். தேனிலும் இனிமையானது. தேவனுடைய வார்த்தை, நம்மை பாவத்தின் பிடியிலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளது.

வசனம் ஒரு கண்ணாடி, நம் இருதயத்திலுள்ள எல்லா பாவ அழுக்கையும் சுட்டிக்காட்டும் வல்லமையுள்ளது நாம் தேவனுக்குள் இருக்கிறோமா? அல்லது இந்த பாவம் நிறைந்த உலகத்திற்கு ஏற்றவாறு ஜீவிக்கிறோமா? என்று காண்பித்துவிடும். பாவத்தை உணர்த்திவிடும். அதைவிட நம்மை ஏவிக் கொண்டே இருக்கும்.

தேவனுடைய வசனம் ஒரு சம்மட்டி. எரே 23 : 29 எந்த கல்லான, தீமை நிறைந்த மனதையும், நொறுக்கிவிடும். மனம் திரும்பி நேர் வழியில் செல்ல வைக்கும் வல்லமையுள்ளது. தேவனுடைய வார்த்தை, ஜீவனும் வல்லமையும் சதாகாலமும் உள்ளது. காலவரம்பு கிடையாது. பழைய மனிதனை புதைத்துவிட்டு புது மனிதனை வெளிக் கொண்டுவரும் புது மனிதன்னை அன்று முதல் நன்மையான பாதையில் நடத்தும் பழையபடி பாவத்துக்குள் அடிமையாகாதபடி எச்சரித்துக் கொண்டே இருக்கும்.

தேவனுடைய வசனம் சிறந்த நண்பன் நம்மை தீமைக்கு சென்றுவிடாதபடி தடுத்துக் கொண்டே இருக்கும் (சங் 119 : 9) தேவனுடைய வசனம் எப்பொழுதும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டே இருக்கும். நாம் இடறாதபடி, காத்துக் கொள்ளும். நமது தேவனும் வாக்கு மாறாதவர் அவருடைய வார்த்தையும் வாக்கு மாறாதது. தாவீதுராஜா சொல்லுகிறார்.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனிதன் பாக்கியவான். (சங் 1 : 2).

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தேவன் விளம்பின வேதமே நலம் (சங் 119 : 72) உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி என்கிறார். நாம் வசனத்தின்படி நடக்கும்பொழுது எப்பொழுதுமே மகிழ்ச்சி உண்டாகும், ஏனெனில் நம்மிடத்தில் எந்த கறை திரையும் இல்லை, தேவனும் அவருடைய வசனமும், நம்மில் குடியிருந்தால், நாமே தேவனுடைய ஆலயம்.

**ஞானம்**
மலேசியா

## பவுலுடைய எழுத்துக்களில் மிளிரும் நம்பிக்கையைப் பாருங்கள்!

1. *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு." (பிலிப் 4 : 13)*
2. *"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்... அது தேவ பெலனாயிருக்கிறது." (ரோமர் 1 : 16)*
3. *"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்." (II தீமோ 4 : 7)*
4. *"....நான் நல்மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து கொண்டேன்." (அப். 23 : 1)*
5. *"... நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்." (II தீமோ 1 : 12)*
6. *"... ஏனென்றால் நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன் நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது." (II தீமோ 4 : 6)*

# அரசு வருகிறதா?

கிறிஸ்து மீண்டுமாக விரைவில் வந்து தனது அரசை இவ்வுலகில் நிறுவப் போகிறாரா? மத்திய கிழக்கு நாடுகளின் நடவடிக்கைகளை தொடர்ந்து கவனித்து வரும் பல மதத்தலைவர்கள், அங்குள்ள நிலைமையை பயன்படுத்திக் கொண்டு, கிறிஸ்து மீண்டும் விரைவில் வந்து தனது அரசை இப்பூமியில் நிறுவி ஆட்சி செய்யப் போகிறார் எனக் கூறுகின்றனர். இத்தகைய 'முன்னுரைத்தல்' ஒரு உண்மையைக் காணத்தவறிவிடுகிறது. அதாவது, இயேசு கிறிஸ்து தனது அரசை அரசை 1900 ஆண்டுகளுக்கு முன்பே நிறுவிவிட்டார் என்பதை.

மாற்கு 9:1ம் வசனத்தில் இயேசு தனது சீடர்களிடம், "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். "இயேசுவின் உதடுகளிலிருந்து வந்த இந்த தெளிவான அறிக்கை, அங்கு நின்று கொண்டிருந்த மக்கள் சிலரின் வாழ்நாளிலேயே இராஜ்ஜியம் (அரசு) வரும் என்பதைத் தானே காட்டுகிறது? அன்றைய தினத்தில், இயேசுவின் அருகில் நின்று கொண்டிருந்த எல்லா மக்களும் மடிந்து போய் பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. வரப்போகிற நாட்களில் இராஜ்யம் வரும் என்று இதற்கு அர்த்தம் அல்ல. மேற்சொன்ன அறிவிப்பை இயேசு வெளியிட்ட சிறிது காலத்திற்குள் இராஜ்ஜியம் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

கொலோசெயர் 1:13ம் வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் தேவனுக்கு நன்றி செலுத்துகையில், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" என்கிறார். பவுல் கொலோசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு தனது கடிதத்தை எழுதும் முன்பே கிறிஸ்துவின் இராஜ்ஜியம் நிறுவப்பட்டுவிட்டது என்பதை இவ்வசனம் தெளிவாகப் போதிக்கிறது. முதல் நூற்றாண்டிலேயே பவுலும் பிற எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திற்குள் ஏற்கனவே வந்தது. அந்நாளில் நடந்தவற்றைப்

பற்றிய விவரங்கள் அனைத்தும் அப்போஸ்தகர் நடபடி 2ம் அதிகாரத்தில் பதிவாகியுள்ளன. அன்றைய தினத்தில் 3000 பேர்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். இதுவே கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபை உதயமான நாள் ஆகும்.

கிறிஸ்து மீண்டும் வருவாரா? அப்போஸ்தலர் நடபடி 1:11ம் வசனம் அவர் வருவார் என தெரிவிக்கிறது. ஆனால், இப்பூமியில் கிறிஸ்து இறங்கி ஒரு தலைமையகத்தை இங்கு அமைத்துக் கொண்டு ஆட்சி செய்யப் போவதாக வசனங்கள் போதிக்கவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தை சிலர் சுட்டிக்காட்டி, கிறிஸ்து பூமிக்கு வந்து ஆளப்போவதாகக் கூறுகின்றனர். ஆனால், வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தை கவனமாகப் படித்துப் பார்த்தால், கிறிஸ்து பூமிக்கு வருவது பற்றி அது ஒன்றும் கூறவில்லை என்பதைக் காணலாம்.

இராஜ்ஜியம் (அரசு) ஏற்கனவே நிறுவப்பட்டுவிட்டது. கிறிஸ்து அரசராக ஆண்டு வருகிறார். கிறிஸ்து மீண்டும் வரும் போது, மரித்தவர்களும், உயிரோடு இருப்பவர்களுமான எல்லா கிறிஸ்தவர்களும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்பார்கள். (1 தெசெ 4:17) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பூமியில் ஒரு இராஜ்ஜியத்தை நிறுவ அல்ல. "அதன் பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்." (1 கொரி 15:24)

இராஜ்ஜித்தைக் காணவிரும்புவது நல்லதே. ஆனால் அதை எதிர்காலத்தில் தேடவேண்டியதில்லை. கிறிஸ்துவின் இராஜ்ஜியம் அவருடைய சபையே. அவருடைய சபையைக் கண்டுபிடிக்கும் போது, அவருடைய இராஜ்ஜியத்தை கண்டுபிடிக்க முடியும்.

**Royce Frederick.** *ராய்ஸ் ப்ரெடெரிக்.*

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20, டிசம்பர்
-THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி:-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ் " வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor **E.Z.S. Rajanayagam**

If undelivored Please return to
The Editor Phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
Post Box No. 27, KANGAYAM - 638 701.

PRINTED MATTER BOOK - POST